சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் சார்பில் நேற்று (09.08.2023) கிழக்கு கடற்கரை சாலை, நெம்மேலியில் அமைக்கப்பட்டு வரும் நாளொன்றுக்கு 150 மில்லியன் லிட்டர் உற்பத்தி திறன் கொண்ட கடல்நீரை குடிநீராக்கும் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானப் பணிகளை நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். உடன் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலாளர் முனைவர்.த.கார்த்திகேயன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் இரா.கிர்லோஷ் குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், திருப்போரூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, திருப்போரூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் எஸ். ஆர்.எல்.இதயவர்மன், ஆத்ம வேளாண்மை பையனூர் சேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

காளையார்கோவில் டி.என்.கருணாநிதி மறைவு!

சிவகங்கை. ஆக.10- சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் ஊராட்சி கழக செயலாளர் டி.என்.கருணாநிதி மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். சிவகங்கை மாவட்ட முன்னாள் விவசாய அணி துணை அமைப்பாளர் சிறுபாலை பா. காளிமுத்து. இவரது மூத்த மகள் கனிமொழி, இவரது கணவர் டி.என். கருணாநிதி. காளையார்கோவில் ஊராட்சி கழக செயலாளராக இருந்தார். இவருக்கு ஒரு மகள் ஒரு மகன் உள்ளனர். இவர் நேற்று முன்தினம் அதிகாலை மரணம் அடைந்தார்.

செய்தியறிந்த மாவட்டக் கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரிய கருப்பன், சுப.மதியரசன், வே.ஆரோக்கியசாமி, ஆறு. செல்வராசன் உட்பட கழக நிர்வாகிகள் அன்னாரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தின் கீழ், பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், மடுவின்கரை சென்னை மேல்நிலைப்பள்ளியில் மேல்நிலைக் கல்வி பயிலும் 197 மாணவ, மாணவியருக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் விலையில்லா மிதிவண்டிகளை நேற்று (09.08.2023) வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ்குமார், மண்டலக் குழுத் தலைவர் ஆர். துரைராஜ், மாமன்ற உறுப்பினர் தா.மோகன் குமார், கல்வி அலுவலர் மற்றும் உதவிக் கல்வி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ் நாட்டில் கைத்தறி தொழிலை பாதுகாக்க

ஒன்றிய அரசு போர்க்கால அடிப்படையில் உடனடியாக தலையிட வேண்டும்!

மக்களவையில் எஸ். ஜெகத்ரட்சகன் பேச்சு!

புதுடெல்லி, ஆக. 10- திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் இன்று, 9 ஆகஸ்ட் 2023 மக்களவையில், நாடாளுமன்ற விதி எண், 377ன் படி, விவாதத்தில் பங்கேற்று பேசியதாவது:

உலகத்திலேயே பருத்தி உற்பத்தியில் இந்தியா, முதலிடம் வகித்த போதிலும் அரக்கோணம் நாடாளுமன்ற தொகுதியில் 80,000க்கும் மேற்பட்ட விசைத்தறி மற்றும் கைத்தறி நெசவாளர்கள் வேலை இழந்து தவிக்கும் நிலையில் மொத்த தொகுதியிமே பொருளாதார மந்த நிலையில் பாதிக்கப்பட்டுள்ளதை போலத் தோன்றுகிறது. தமிழ்நாட்டில் விசைத்தறி தொழிலை பாதுகாக்க வேண்டுமெனில் கீழ்க்கண்ட சலுகைகள் அளிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும்,

சரக்கு மற்றும் சேவை வரியில் வரிக்குறைப்பு செய்தல்.

நூல் விலையேற்றத்தை தடுக்க உரிய தள்ளுபடி அளித்தல்.

விசைத்தறி நெசவாளர்களுக்கான ஓய்வூதியம் அளித்தல்.

விசைத்தறிக்கென இலவச மின்சாரம் அளித்தல்

விசைத்தறி நெசவுத் தொழிலுக்குரிய தொழில் நுட்ப வசதிகளை மேம்படுத்தி தருதல்.

திருத்தணியில் ஜவுளி பூங்கா உடனடியாக அமைத்தல் ஆகியன விசைத்தறி தொழிலை பாதுகாக்க ஒன்றிய அரசு உடனடியாக செய்ய வேண்டியவை.

நூல் விலையேற்றத்தால் கைத்தறி நெசவாளர்கள் தமிழ்நாட்டில் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர். உள்நாட்டு சந்தையிலும், வெளிநாட்டு சந்தையிலும் கைத்தறி ஆடைகளுக்கான தேவையை ஏற்படுத்துவதில் ஒன்றிய அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்தால் மட்டுமே இத்தொழிலில் வேலை வாய்ப்புகளை பாதுகாக்க இயலும்.

கைத்தறி தொழிலை தமிழ்நாட்டில் பாதுகாக்க வேண்டுமெனில் கீழ்க்கண்ட உடனடி நிவாரணங்களை ஒன்றிய அரசு அளித்தாக வேண்டும்.

சரக்கு மற்றும் சேவை வரியிலிருந்து விலக்களித்தல்.

நூல் விலையேற்றத்தை தடுக்க தேவையான சலுகை அளித்தல்.

தமிழ் நாட்டிலுள்ள நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களை வலுப்படுத்துதல்.

கைத்தறி நெசவாளர்களுக்கு நிலுவையில் உள்ள விற்பனைத் தொகையை உடனடியாக தந்து உதவுதல்.

கைத்தறி ஆடைகளின் ஏற்றுமதியை ஊக்கப்படுத்த ஆவன செய்தல்.

மேற்கண்ட நடவடிக்களை ஒன்றிய அரசு, போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டால் மட்டுமே, தமிழ்நாட்டில் விசைத்தறி தொழிலும், கைத்தறி தொழிலும் பொருளாதார மந்த நிலையிலிருந்து மீண்டு வர இயலும் என்று அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன், சபாநாயர் திரு. ஓம் பிர்லா அவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

தனியார் தொலைக்காட்சிகளை இயக்குவதில்

அந்நிய நேரடி முதலீட்டை ஒன்றிய அரசு அனுமதித்துள்ளதா?

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 10 - தனியார் தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் 24/7 புதிய சேனல்களை இயக்குவதில் 75 சதவீதத்துக்கும் அதிகமான அன்னிய நேரடி முதலீட்டை (FDI) ஒன்றிய அரசு அனுமதித்துள்ளதா என்பது குறித்தும், கடந்த ஆறு ஆண்டுகளில் கார்ப்பரேட் நிறுவனங்கள்/கார்ப்பரேட் நிறுவனங்களால் விற்கப்பட்ட, இணைக்கப்பட்ட அல்லது புதிய தொலைக்காட்சி சேனல்கள்/டிவி சேனல்கள் பற்றிய விவரங்கள் குறித்தும் இந்திய பிரஸ் கவுன்சில் சீரமைப்பது குறித்தும் நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி? எழுப்பினார்.

நாட்டில் தனியார் தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் 24/7 புதிய சேனல்களை இயக்குவதில் 75 சதவீதத்துக்கும் அதிகமான அன்னிய நேரடி முதலீட்டை (FDI) ஒன்றிய அரசு அனுமதித்துள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை? கடந்த ஆறு ஆண்டுகளில் கார்ப்பரேட் நிறுவனங்கள் / கார்ப்பரேட் நிறுவனங் களால் விற்கப்பட்ட, இணைக்கப்பட்ட அல்லது புதிய தொலைக்காட்சி சேனல்கள்/டிவி சேனல்கள் பற்றிய விவரங்கள் யாவை?

இந்திய பிரஸ் கவுன்சில்? மற்றும் பிராட்காஸ்ட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட் நிறுவனத்தை சீரமைக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?

இதற்கு ஒன்றிய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சர்; மற்றும் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் வருமாறு

இந்திய ஒன்றிய அரசின் தற்போதைய FDI கொள்கையின் கீழ், செயற்கைக் கோள் செய்தி தொலைக்காட்சி சேனல்களுக்கான FDI வரம்பு 49%, செய்தி அல்லாத தொலைக்காட்சி சேனல்களுக்கு, 100% வரை FDI அனுமதிக்கப்படுகிறது. இந்தியாவில் செயற்கைக் கோள் தொலைக்காட்சி சேனல்களை அப்லிங்க் மற்றும் டவுன்லிங்க் செய்வதற்கான கொள்கை வழிகாட்டுதல்களின் பிரிவு 32, 2022ன் படி, நிறுவனங்கள் சட்டம், 2013, லிமிடெட் லையபிலிட்டி சட்டம், 2008 அல்லது வரையறுக்கப்பட்ட விதிகளின்படி தொலைக்காட்சி

சேனல்களின் அனுமதியை வேறு நிறுவனத்திற்கு மாற்றலாம். மேலும் இது கொள்கை வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

ஒன்றிய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சகம் கடந்த ஆறு ஆண்டுகளில் 237 புதிய டிவி சேனல்களுக்கும், நடப்பு ஆண்டில் 2023-24ல் 5 டிவி சேனல்களுக்கும் அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், கடந்த ஆறு ஆண்டுகளில் அந்தந்த அனுமதிக்கப்பட்ட நிறுவனங்களின் இணைப்பு காரணமாக 28 தொலைக்காட்சி சேனல்களுக்கான அனுமதியும் மாற்றப்பட்டுள்ளது.

இந்திய பிரஸ் கவுன்சில் என்பது பாராளுமன்ற சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சட்டப்பூர்வ சார்பு நீதித் துறை தன்னாட்சி அதிகாரமாகும். இந்திய பிரஸ் கவுன்சிலில் எந்த மாற்றத்திற்கும் ஒன்றிய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பிராட்காஸ்ட் இன்ஜினியரிங் கன்சல்டன்ட் இந்தியா லிமிடெட் (BECIL) என்பது இந்த அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு மினி ரத்னா பொதுத் துறை நிறுவனமாகும், இது திட்ட ஆலோசனை மற்றும் ஆயத்த தயாரிப்பு தீர்வுகளை வழங்குகிறது. BECIL இல் கட்டமைப்பு மாற்றங்கள் எதுவும் இல்லை. இருப்பினும், சமீப காலங்களில், மூலோபாய திட்டங்களின் துறைகளில் பல்வகைப்படுத்தவும், அதன் செயல்முறை கள் மற்றும் நடைமுறைகளை நெறிப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 3வது ஊதிய திருத்தத்தின் பலன்கள் அதன் ஊழியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

சமூக நீதியை காக்கும் வகையில்

குரும்பர் சாதியினரை பழங்குடியினர் பட்டியலில் சேர்த்திடுக!

மக்களவையில் சி.என்.அண்ணாதுரை தனிநபர் மசோதா தாக்கல்!

புதுடெல்லி, ஆக. 10 - தமிழ்நாட்டில் தற்போது மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் குரும்பர்கள் இடம்பெற்றுள்ளனர். அவர்களில் குரும்பா, குரும்பர், குருமன் என அழைக்கப்படுபவர்கள் பல மாவட்டங்களில் வசிக்கின்றனர். அதே நேரத் தில் குரும்பரில் ஒரு பிரிவினர் குருமன் என பழங்குடி பட்டியலிலும் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் ஒரே வகுப்பினர் என்ற அடிப்படையில் அனைவரையும் குருமன் என்ற பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்பது நீண்டகால கோரிக்கையாக இருந்து வருகிறது.

சமூக நீதியைக் காக்கும் வகையில் குரும்பா, குரும்பர், குருமன் ஜாதியினரை குருமன் என பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க வேண்டும் கழக அரசு சார்பில் ஒன்றிய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. குரும்பர்கள் ஒரே இனம் என பல்வேறு ஆய்வுகளால் உறுதி செய்யப்பட்டு, முடிவுகளும் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் அரசமைப்பு பிரிவு 342ல் திருத்தம் செய்து நடவடிக்கை எடுக்குமாறு கழக அரசு சார்பில் ஒன்றிய அரசுக்கு பரிந்துரைகள் அனுப்பி வலியுறுத்தப்பட்டு வந்தது.

அவ்வகையில் நாடாளுமன்ற திருப்பத்தூர் தொகுதி கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரையால் தாக்கல் செய்யப்பட்ட தனி நபர் மசோதா வருமாறு:

குருமன்கள் தமிழ்நாட்டின் பூர்வீக பழங்குடி இனத்தவர்கள் மற்றும் அவர்களின் பாரம்பரியம், கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், குணாதிசயங்கள் போன்றவற்றுடன் தமிழ்நாடு முழுவதும் வசிக்கின்றனர். இந்திய அரசியலமைப்பின் பிரிவு 366 (25) இன் படி, பட்டியல் பழங்குடியினர் என்பது பழங்குடியினரைக் குறிப்பிடு வதற்கான அரசியலமைப்பு பிரிவு 342 (2) இன் நோக்கத்திற்காக அத்தகைய பழங்குடியினர் அல்லது பழங்குடி சமூகங்கள் அல்லது அத்தகைய பழங்குடியினருடன் உள்ள குழுவின் பகுதிகளைக் குறிக்கிறது.

தமிழ்நாட்டின் ஊட்டியில் உள்ள பழங்குடியினர் ஆராய்ச்சி மையத்தின் இனவரைவியல் விரிவான ஆய்வின்படி, மேற்கூறிய சமூகம் பிறப்பு, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், பண்புகள் ஆகியவற்றால் பழங்குடிகள் என வும், இந்தியாவின் முதல் இந்திய சர்வேயர் ஜெனரல் மெக்கன்சியின் 1816ம் ஆண்டு கையெழுத்துப் பிரதிகள், மற்றும் பிற பழங்குடி இலக்கியங்களான மெட்ராஸ் பொது இலக்கியம் மற்றும் அறிவியல் அமைப்பின் சான்றுகளுடன் குருமன் பழங்குடியினருக்கு அத்தகைய பொதுவான பெயர்கள் மற்றும் கலாச்சாரம், பழக்கவழக்கங்கள், வரலாறு மற்றும் தோற்றம் ஆகியவற்றுடன் ஒத்த சொற்களுடன் இசைவாக உள்ளன. அதனால் அவை பழங்குடியினர் வகைப்படுத்தலின் கீழ் அடையாளம் காணப்பட வேண்டும்.

சமூக நீதி நிலைநாட்டப்படவும், அதில் காலதாமதம் ஏற்படாமல் தவிர்க்கும் வகையிலும் குருமன் பட்டியலில், குருமா, குருமன், குரும்பா, கும்பகவுண்டர், குரும்பன், குரும்பர் பழங்குடியினர் என்று சேர்க்க அரசியலமைப்பு (பட்டியல் பழங்குடியினர்) உத்தரவு திருத்த மசோதா 2023 என்பதன் மூலம் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட திருத்தம் மூலம் ஆதிவாசி குருமன் பழங்குடி மக்களுக்கு அனைத்து வகையான சமூகபொருளாதார சுரண்டல்களுக்கு எதிராக அரசியலமைப்பு சட்டம் பாதுகாப்பை உறுதி செய்யும். மேலும், அரசியலமைப்பின் 46வது பிரிவின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அனைத்து அரசியலமைப்பு மற்றும் சட்ட உரிமைகளையும் குருமன் பழங்குடியினருக்கு வழங்கும்.

இவ்வாறு சி.என். அண்ணாதுரை கோரிக்கை விடுத்திருந்த நிலையில் அதை ஏற்று ஒன்றிய அரசு மேற்கொண்ட சட்டத்திருத்த மசோதா விவரங்கள் வருமாறு :

அரசியலமைப்பு (பட்டியல் பழங்குடியினர்) உத்தரவு திருத்த மசோதா, 2023ன் கீழ் அரசியலமைப்பு (பட்டியல் பழங்குடியினர்) ஆணை 1950ல் யில் திருத்தம் செய்யப்பட்டு இந்தியக் குடியரசின் 74வது ஆண்டில் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு:

1. இந்த சட்டத்தை அரசியலமைப்பு (பட்டியல் பழங்குடியினர்) உத்தரவு திருத்தச் சட்டம், 2023 என்று அழைக்கப்படும்.

2.1950ஆம் ஆண்டு அரசியலமைப்பு (பட்டியல் பழங்குடியினர்) ஆணை அட்டவணையின் பகுதி 14, தமிழ்நாடு என்ற அட்டவணையில் பதிவு 18ல் பின்வரும் உள்ளீடுகள் மூலம் மாற்றப்படுகிறது. அவற்றின் பெயர் விபரங்களா வன :

18. குருமன்கள் என்ற பெயர்களை யொத்த குருமா, குருமன், குரும்பா, குரும்பகவுண்டர், குரும்பன், குரும்பர் பழங்குடிகள் என சேர்க்கை செய்யப்படுகிறது.

இந்த மசோதாவில் குருமா, குருமன், குரும்பா, குருமன் கவுண்டர், குரும்பன், குரும்பர் ஆகிய பெயர்களை குருமன் என்று தமிழ்நாடு அரசின் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க, 1950ஆம் ஆண்டு அரசியலமைப்பு (பட்டியல் பழங்குடியினர்) ஆணை வழிவகை செய்கிறது. இந்த மசோதா இயற்றப்பட்டால், பழங்குடி சமூகத்தினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான அரசின் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் நன்மைகள் காரணமாக தொடந்த செலவினங்கள் ஏற்படும். அந்த வகையில் ஏற்படக்கூடிய சரியான தொகையைக் குறிப்பிட இயலாவிடினும், ஆண்டுக்கு சுமார் 35 கோடி ரூபாய் தொடர் செலவினமாக இருக்க வாய்ப்புள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், சுமார் 70 கோடி ரூபாய் மொத்த தொடரா செலவினமும் இதில் ஏற்படலாம்.

இவ்வாறு அந்த சட்டத்திருத்த மசோதாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நெருப்பாறு நீந்திய சூரியக் குதிரை' ,முரசொலி வாழ்க பல்லாண்டு!

முரசொலி' கலைஞர் மூச்சொலி: கழக
வரலாறு தீட்டும் வரிப் புலி'
திராவிட இனத்தின் துடிப்பொலி !
ஈரோட்டுக் கிழவர் மனத்தொலி :
கொட்டுப்பேரிகை எதிரொலி:
காஞ்சிக் கதிரவன் அருந்தவ அண்ணா
வாஞ்சையைப் பெற்ற வாழ்த்தொலி: ஏட்டொலி'!
பாவேந்தர் போற்றிய பாடநூற் கழகம்: படிப்பெறும்புகள் தேடும்
பனங்கற் கண்டு;
கலைஞரின் திருமுகம்; தொடுதாள் தொண்டன் நித்தம் பார்க்கும்
நிலைக்கண்ணாடி'
மூட நம்பிக்கை முதுகெலும் பொடித்திடும் பட்டறை | ஆம் :பகுத்
தறிவுப் பாசறை!
சாதி, மதப்பேய், சான்றிலாத் தெய்வம் வேதியர் வழங்குபொய்
வீழ்த்திய விடகாரி" வடவர் வேய்ந்த கொடுமுடி சாய்த்த கடுமா 'மணிமுடி
தமிழர்க்கோ திருநா" பொய்யுரை தகர்க்கும் மெய்யுரை விளக்கு',
நெய்யிலா வெய்யோன்; திரியிலாத் திங்கள்' மையல் கொளத்தகு
வையத்துப்பொதியம் :
கலைஞர்கை ஒளிர்வாள்' கவிஞர் ஏறுதோள்" நெருக்கடி நிலையிலும்
நெருப்பாறு நீந்திய சூரியக் குதிரை :தமிழர்ச் சேனை:
அரசியல் இலக்கியம் வரலாறு பாடும் புரட்சிக் பூங்குயில்'
கைஅகவும் தாள்மயில் 'கவிதை, கட்டுரை , கடிதப் பரப்புரை;
புவிநிகழ்க் கருத்துரைப் பல்கலைக் கழகம்' கவின்மிகு செந்தேன்
ஊறிடும் குளிர்ச்சுனை.
ஆண்டான் ,அடிமை அகற்றும் நீந்துப் பெருகடல் 'கருத்துப் பெட்டகம்;
பொத்தகம்:
ஒல்லார் தீச்செயல் பொல்லாக் கெடுவினை நில்லாச் செய்த நீள்கோல்'
கூர்வேல்.
ஊறுவது கண்டே உறுமி நாளும் செறுநர் வீழ, செறுகளந் தன்னில்
சாதனை படைக்கும் சண்ட மாருதம்'
செங்கை விரிக்கும் பங்கய இதழ்மணம்!
பொங்கு கங்கை புதுப்புனல் சுவை போல் எண்டிசைச் செய்தி ஏந்தித்
தந்திடும் தண்டலை முரசொலி'
குற்ற முறைப்பதில் கண்ணகி சிலம்பு'
கருத்துப் பசியாற்றும் நன்மணி மேகலை
'நீதி புகல்வதில் திருக்குறள்'
நிலத்தார் திருந்தவே கலைஞரின்அரும்விரல்' சென்னியைத்
திருகிடும் தினமடல்!
அழிக்க வெழுந்த ஆரியம் தோற்றதால் மொழிப்போர்க் கேடயம்'
விழியது இமைஅரண்' பொய்யுரை புதையல்; புலமைச் சுரங்கம்.
முழங்கு சங்கம் முறுவல் புவனம்'
வானும் ,மண்ணும், வளியும் ,ஒளியும், தேனுறை நீரும் வாழ்த்தும்
செய்தியால் விளங்கு மண்டலக் களங்காண்
முரசொலி'
களம்பல கண்ட காவிரி நாடனின் கலங்கரை
விளக்கம்:
சோழன் மெய்கீர்த்தி' விளங்கு புகழிதழ் முரசொலி
வளம்பல பெருகவே! வாழ்க பல்லாண்டு!

கவிஞர் தமிழ்தாசன்
கழகத் தீர்மானக்குழு தலைவர்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவள்ளூர் மாவட்டம், ஆவடி மாநகராட்சி, பட்டாபிராம், இந்து கல்லூரியில் வருகிற ஆகஸ்ட் 12ஆம் நாள் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் மற்றும் இளைஞர்கள் திறன் திருவிழா நடைபெற உள்ளதை முன்னிட்டு நேற்று முன்தினம் (08.08.2023) இந்துக்கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வரும் முன்னேற்பாட்டு பணிகளை முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர்எம்.எல்.ஏ முன்னிலையில் தமிழ்நாடு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ. கணேசன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் கொ.வீரராகவ ராவ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ், மாநகராட்சி ஆணையர் க.தர்ப்பகராஜ், வேலைவாய்ப்பு துறை மண்டல இணை இயக்குநர் ஜோதிமணி, தொழிலாளர் நலத்துறை துணை இயக்குநர் திவ்யா, உதவி ஆணையர் (அமலாக்கம்) பி.ஷோபனா, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை உதவி இயக்குநர் விஜயா மாநில மாவட்ட நிர்வாகிகள் நடுகுத்தகை ஜெ.ரமேஷ், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன்பிரகாஷ், ஆவடி பகுதி செயலாளர் பேபிசேகர், ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், மண்டல குழு தலைவர் ஜோதி லட்சுமி மற்றும் பல்வேறு துறை அரசு அலுவலர்கள் உள்ளனர்.